கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த மாதம் வரை நாம் நடத்தும் ஒருநாள் முகாம்களில் 8 சிறுவர் குதூகல முகாம்கள், 3 வாலிபர் வெற்றி முகாம்கள், 2 மாணவ ஆலோசனை முகாம்கள் நடைபெற்று முடிந்துள்ளன. தேவனைத் துதியுங்கள்.

இம்முகாம்களில் 2 முகாம்களை தாங்க 2 குடும்பத்தினர் முன்வந்து தாங்கினர். விருதுநகர் Rev. அப்பாத்துரை அவர்கள் குடும்பத்தினர், செந்நெல்குளம் சிறுவர் முகாமையும், புதுக்கோட்டையைச்சேர்ந்த சகோ. ராஜா குடும்பத்தினர், ஸ்ரீமூலக்கரை சிறுவர் முகாமையும் முன் வந்து தாங்கினர். அவர்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

இன்னும் நடைபெற வேண்டிய 12 சிறுவர் முகாம்களும், 17 வாலிபர் முகாம்களும், 8 மாணவர் முகாம்களும், அநேக குடும்ப மனமகிழ்ச்சி முகாம்களும் நமக்கு முன் உள்ளது, இவைகளுக்காகவும் ஜெபியுங்கள். இவைகளைத் தாங்குவோர் எழும்ப ஜெபியுங்கள்.

## நவம்பர் மாதம் நடைபெறவுள்ள முகாம்களுக்காக ஜெபியுங்கள்

### சிறுவர் குதூகல முகாம்கள்

| | | |
|---|---|---|
| 2.11.2014 | கிருபையின் ஆலயம் | மைப்பாறை, விருதுநகர் மாவட்டம் |
| 9.11.2014 | கிருபையின் ஆலயம் | புல்லக்கவுண்டன்பட்டி, விருதுநகர் மாவட்டம் |
| 16.11.2014 | கிருபையின் ஆலயம் | பண்டுதன்பட்டி விருதுநகர் மாவட்டம் |
| 23.11.2014 | கிருபையின் ஆலயம் | முத்தாண்டியாபுரம், விருதுநகர் மாவட்டம் |
| 30.11.2014 | கிருபையின் ஆலயம் | சாத்தூர், விருதுநகர் மாவட்டம் |

### குடும்ப மனமகிழ்ச்சி முகாம்கள்

| | | |
|---|---|---|
| 1.11.2014 | கிருபையின் ஆலயம் | தோப்புப்பட்டி, திருச்சி மாவட்டம் |
| 8.11.2014 | செல்வி திருமண மஹால் பாளையங்கோட்டை | |
| 23.11.2014 | கிருபையின் ஆலயம் | என். திருவேங்கடபுரம், விருதுநகர் மாவட்டம் |

மேற்கண்ட முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

---

நமது 2வது திருவசனத்தேர்வு 26-10-2014 அன்று 30 மையங்களில் 600க்கும் மேற்பட்டவர்கள் தங்களை பதிவு செய்து தேர்வு எழுதினார்கள். இந்தத் தேர்வு ஜெபத்துடன் நிறைவு பெற்றது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு கலந்து கொண்டவர்கள் அதிகம். இந்தத் தேர்வில் நமக்கு ஒத்துழைத்த எல்லா சபைப் போதகர்கள், நமது மிஷனெரிகள் மற்றும் தேர்வு நடத்த உதவி செய்த தன்னார்வ ஊழியர்கள் யாவருக்கும் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நன்றி தெரிவிக்கிறோம்.

3வது திருவசனத்தேர்வு 25-10-2015 ஞாயிறு அன்று நடைபெறும். அதற்காக ஜெபியுங்கள். வேதபகுதி பின்னர் அறிவிக்கப்படும். தொடர்ந்து ஊழியங்களுக்காக ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

அன்புடன் உங்கள் சகோதரன்
**பா. பொற்செல்வன் ஆசீர்**



# நான் என்ன செய்ய வேண்டும்?

தொடர் - 73
நவம்பர் 2014

*தொகுப்பு:* **Dr. B. வில்லியம் தர்மராஜா**

**ரோமர்**

3601 தீர்க்கதரிசனஞ் சொல்லுகிற வரத்தைக் கொண்டிருந்தால், விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல் (12:6)
3602 உன் அன்பு மாயமற்றதாயிருப்பதாக (12:9)
3603 தீமையை வெறுத்து நன்மையைப் பற்றிக் கொள் (12:9)
3604 சகோதர சிநேகத்திலே பட்சமாயிரு (12:10)
3605 கனம் பண்ணுகிறதிலே முந்திக் கொள் (12:10)
3606 அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிரு (12:11)
3607 ஆவியிலே அனலாயிரு (12:11)
3608 கர்த்தருக்கு ஊழியஞ் செய் (12:11)
3609 நம்பிக்கையிலே சந்தோஷமாயிரு (12:12)
3610 உபத்திரவத்திலே பொறுமையாயிரு (12:12)
3611 ஜெபத்திலே உறுதியாய்த் தரித்திடு (12:12)
3612 பரிசுத்தவான்களுடைய குறைவில் அவர்களுக்கு உதவி செய் (12:13)
3613 அந்நியரை உபசரி (12:13)
3614 உன்னைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதி; சபியாதே (12:14)
3615 சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படு; அழுகிறவர்களுடனே அழு (12:15)
3616 ஒருவரோடொருவர் ஏக சிந்தை கொண்டிரு (12:16)
3617 மேட்டிமையானவைகளைச் சிந்தியாமல் தாழ்மையானவர்களுக்கு இணங்கு (12:16)
3618 உன்னையே புத்திமானென்று எண்ணாதே (12:16)
3619 ஒருவனுக்கும் தீமைக்கு தீமை செய்யாதே (12:17)
3620 எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடு (12:17)
3621 கூடுமானால் உன்னாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிரு. (12:18)
3622 நீ பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடங்கொடு (12:19)
3623 உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால் அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித் தழலை அவன் தலையின்மேல் குவிப்பாய் (12:20)
3624 நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு (12:21)
3625 மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படி (13:1)
3626 அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்காதே; அப்படிப்பட்டவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்பதோடு தனக்குத்தானே ஆக்கினையை வருவித்துகொள்ளகிறான். (13:2)
3627 நீ அதிகாரத்திற்குப் பயப்படாதிருக்க வேண்டுமானால், நன்மைசெய், அதினால் உனக்குப் புகழ்ச்சி உண்டாகும். (13:3)
5628 நீ கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படிய வேண்டும் (13:5)

3629 யாவருக்கும் செலுத்த வேண்டிய கடமைகளைச் செலுத்து; வரியைச் செலுத்த வேண்டியவனுக்க வரியையும், தீர்வையைச் செலுத்த வேண்டியவனுக்குத் தீர்வையையும் செலுத்து (13:7)

3630 எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படு; எவனைக் கனம் பண்ண வேண்டியதோ அவனைக் கனம் பண்ணு (13:7)

3631 ஒருவரிடத்திலொருவர் அன்பு கூருகிற கடனேயல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிரு. (13:8)

3632 விபசாரம் செய்யாதே (13:9)

3633 கொலை செய்யாதே (13:9)

3634 களவு செய்யாதே (13:9)

3635 பொய்ச்சாட்சி சொல்லாதே (13:9)

3636 இச்சியாதே (13:9)

3637 உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக (13:9)

3638 துர் இச்சைகளுக்கு இடமாக உடலைப் பேணாமலிருந்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத் தரித்துக்கொள் (13:14)

3639 விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள் (14:1)

3640 விசுவாசத்தில் பலவீனமுள்ளவனுடைய மன ஐயங்களைக் குற்றாமாய் நிர்ணயிக்காமலிரு (14:1)

3641 புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாய் எண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவன் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக (14:3)

3642 மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்காதே (14:4)

3643 நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்காதே (14:10,13)

3644 நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணாதே (14:10)

3645 உன் சகோதரனுக்கு முன்பாகத் தடுக்கலையும் இடறலையும் போடாதே (14:13)

3646 போஜனத்தினால் உன் சகோதரனுக்கு விசனமுண்டாக்காதே; உன் சகோதரனை உன் போஜனத்தினாலே கெடுக்காதே (14:15)

3647 உன் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிரு (14:16)

3648 கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்கிறவனே! தேவனுக்குப் பிரியனும் மனுஷரால் அங்கீகரிக்கப்பட்டவனுமாயிரு. (14:18)

3649 சமாதானத்துக்கடுத்தவைகளையும் அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாகத் தக்கவைகளையும் நாடு (14:19)

3650 போஜனத்தினிமித்தம் தேவனுடைய கிரியையை அழித்துப் போடாதே (14:20)

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

**நாள் : 2014 நவம்பர் 25 – கடைசி செவ்வாய்**
**நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**
**இடம் : காமராஜர் திருமண மண்டபம்,**
**பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.**
*தேவசெய்தி :* **சகோ. பா. பொற்செல்வன் ஆசீர்**



# நீதியைத் தரித்துக் கொள்ளுங்கள்

**சகோ. S. ஜெபராஜ்** President, Grace Ministries

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் யாவருக்கும் நல்வாழ்த்துக்கள். 'எனது விசுவாச வாழ்வு அறிக்கைகள்' என்ற பொருளில் தேவனுக்குப் பிரியமில்லாத காரியங்களை வெறுக்கவும் களைந்து போடவும், தகாதவைகளை விட்டுவிலகவும் வேதவசனங்களினால் போதிக்கப்ட்டோம். தேவசாயலாய் மாறவும், இயேசுவின் போர்வீரனாய், பிசாசோடு எதிர்த்து நிற்கவும், இரட்சிப்பின் நம்பிக்கையை தரித்துக்கொண்டு நற்குணங்களிலும் நற்செயல்களிலும் சிறந்தவர்களாக வாழவும் கற்றுக்கொண்டோம். கற்றவைகளைக் கருத்திக் கொண்டு செயல்பட நம்மை அர்ப்பணிப்போம் யோபு என்னும் உத்தமன் கூறுகிறார் : நீதியைத் தரித்துக்கொண்டேன் அது என் உடுப்பாயிருந்தது (யோபு 29:14). எனவே தான் தேவன் அவனைக் குறித்து சாட்சி கொடுத்தார், "யோபு உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவன்" என்பதாக.

## விசுவாசம் நீதிமானாக்கும்

ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது (கலா. 3:6). விசுவாச மார்க்கத்தார்கள் அனைவரும் ஆபிரகாமின் பிள்ளைகள். தேவன் விசுவாசத்தினாலே புறஜாதிகளை நீதிமான்களாக்குகிறார் (கலா. 3:8). நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லை. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (கலா. 3:11) விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான் (எபி. 11:4). விசுவாசத்தினாலே நோவா தன் குடும்பத்தை இரட்சிப்பதற்குப் பேழையை உண்டு பண்ணினான்; அதினாலே உலகம் ஆக்கினைக்குள்ளானதென்று தீர்த்து விசுவாசத்தினாலுண்டாகும நீதிக்குச் சுதந்திரவாளியானான். (எபி. 11:7). தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் (ஆப. 2:4). உங்கள் விசுவாசம் எந்நிலையில் உள்ளது? உங்களைத் தேவனுக்கு முன்பாக நீதிமானாய் மாற்றுகிற அளவிற்கு உள்ளதா? விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள். நீதியை நடப்பித்தார்கள். (எபி. 11:33). உங்கள் ஒவ்வொரு தோல்வியிலும் தேவன் உங்களிடம் கேட்கும் கேள்வி உங்கள் விசுவாசம் எங்கே? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற் போயிற்று? எந்நிலையிலும் யோபு தேவனையே சார்ந்து கொண்டான். மனிதரை சார்ந்து கொள்ளாது, தேவனைச் சார்ந்து கொள்ளுங்கள். ஆசா தன் தேவனாகிய கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு கர்த்தாவே பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்; எங்கள் தேவனாகிய கர்த்தாவே எங்களுக்குத் துணை நில்லும்; உம்மைச் சார்ந்து உம்முடைய நாமத்தில் ஏராளமான இந்தக் கூட்டத்திற்கு எதிராக வந்தோம்; மனுஷன் உம்மை மேற்கொள்ள விடாதேயும். (2நாளா. 14:11)

எதிராக வந்த எத்தியோப்பியர் கர்த்தருக்கும் அவருடைய சேனைக்கும் முன்பாக நொறுங்கிப் போனார்கள். (2நாளா. 14:13). நீங்கள் கர்த்தரையே சார்ந்து கர்த்தரோடிருந்தால் அவர் உங்களோடிருப்பார். (2நாளா. 15:2)

## 2. தாழ்மை நீதிமானாக்கும்

வாழ்க்கையின் அநேக நிலைகளில் மற்றவர்களை அற்பமாய் எண்ணுகிற சுபாவம் நம்மிலே உண்டு. பிறரையோ, பிறகாரியங்களையோ அற்பமாய் எண்ணாதிருங்கள். மற்றவர்களை உங்களைவிடச் சிறந்தவர்களாகவும் மேன்மையானவர்களாகவும் எண்ணுங்கள். இயேசு சொன்னார் : இந்தச் சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். (மத். 18:10) உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும் அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தேவன் தெரிந்து கொண்டார். (1கொரி. 1:28). தங்களை நீதிமான்களென்று நம்பி மற்றவர்களை அற்பமாய் எண்ணின சிலரைக்குறித்து இயேசு ஒரு உவமையில் சொன்னார். இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்திற்குப் போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் ஜெபிக்கிறான்: நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இல்லாததினால் ஸ்தோத்தரிக்கிறேன். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு : தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான் (லூக். 18:9-14). தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். நீங்கள் நீதியைத் தரித்துக் கொள்ள வேண்டுமெனில் உங்களைத் தாழ்த்துவதற்கு ஒப்புக் கொடுங்கள். இயேசு மனுஷரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். (பிலி. 2:8). பிலாத்துவின் மனைவி இயேசுவைக்குறித்து ஒரு சாட்சியின் செய்தியை நியாயசனத்தில் உட்கார்ந்திருக்கிற பிலாத்துவிற்கு அனுப்புகிறாள். "நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம். பிலாத்து அறிக்கை செய்கிறான். இந்த நீதிமானுடைய இரத்த பழிக்கு நான் குற்றமற்றவன். (மத். 27:19,24). நீதியை அணிந்து கொண்டவருக்கு முன் மாதிரி இயேசு ஒருவர் தான். அவரையே உங்கள் வாழ்க்கையின் மாதிரியாக, முன்னோடியாக முன்நிறுத்தி உங்களை நீதிக்கு, நீதிமானாக்கும்படிக்கு அர்ப்பணிப்பீர்களா?

## 3. நீதியை அணிந்து கொள்வதின் மேன்மை

நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள்; அப்பொழுது ஒருவேளை கர்த்தருடைய கோபத்தின்நாளிலே மறைக்கப்படுவீர்கள் (செப். 2:3). நீதியின் மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தி அடைவார்கள்.



நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது (மத். 5:6,10). நீதியினிமித்தமாக நீங்கள் பாடுபட்டால் பாக்கியவான்களாயிருப்பீர்கள் (1பேது. 3:14). இயேசு நீதியுள்ளவராயிருக்கிறாரென்று உங்களுக்குத் தெரிந்திருப்பதினால் நீதியைச் செய்கிறவனெவனும் அவரில் பிறந்தவனென்று அறிந்திருக்கிறீர்கள் (1யோ. 2:29). கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே வேத வசனத்தின்படி நீங்கள் நீதியையும் தேவபக்தியையும் அடையும் படி நாடுங்கள். (1தீமோ. 6:11). முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும். (மத். 6:33). தேவரீருடைய வழிகள் நீதியும் சத்தியமுமனவைகள் (வெளி. 15:3). அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் (வெளி. 22:11). இதோ, சீக்கிரமாய் வருகிறேன்.

**எனது விசுவாச வாழ்வு அறிக்கை :** நான் நீதியை என் உடுப்பாகத் தரித்துக் கொள்ளுகிறேன். (யோபு 29:14)

---

## *நமது பணித்தளங்களில்*
## *தேவன் செய்த கிரியைகளுக்காய் தேவனைத் துதிப்போம்*

பணித்தளம் : **ஜமீன்சல்வார்பட்டி – முதலிப்பட்டி, தம்மநாயக்கன்பட்டி, கட்டுனார்பட்டி, ஓ. கோவில்பட்டி** போன்ற இடங்களில் ஜெப மாதமான ஆகஸ்டு மாதத்தில் உபவாச ஜெபம் நடைபெற தேவன் உதவி செய்தார்.

**சல்வார்பட்டி** ஆலயத்திற்கு பாப்பாத்தி, சீனியம்மாள் என்கிற 2 சகோதரிகள் புதிதாய் வருகிறார்கள். இவர்களுக்காகத் தேவனைத் துதியுங்கள்.

**சங்கர் நகர் கிதியோன் சுவிசேஷக்குழு, விருதுநகர் சுவிசேஷக்குழு** இந்த இரண்டு குழுக்கள் மூலமாக நமது பணித்தளத்தில் சுவிசேஷ ஊழியம் தடையில்லாமல் நடைபெற தேவன் கிருபை செய்தார்.

பணித்தளம் : **பண்டுதன்பட்டி – நாகபாளையம்,** சகோதரி. மல்லிகாவிற்கு மனநிலையிலிருந்து தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தபடியால் கர்த்தரைத் துதிப்போம். பவுன்தாய் என்ற சகோதரிக்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கொடுத்தபடியால் தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **அத்தியூத்து, சீதற்பநல்லூர்,** சகோதரி. ராசுகுட்டி நர்ஸ் பயிற்சி முடித்தவுடன் வேலை கிடைக்க கர்த்தர் கிருபை செய்தபடியால் கர்த்தரைத் துதிப்போம்.

பணித்தளம் : **அழகப்பபுரம்** 8 பேர் ஞானஸ்நானம் எடுக்க கிருபை செய்த தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **திருவேங்கடம்** – தலைவன்பட்டி, சகோ. பெரியசாமிக்கு தேவன் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை தந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

**மேலைமறைநாடு :** சகோதரி. மேரி தயாருக்கு தேவன் சுகம் தந்ததிற்காக தேவனைத் துதிப்போம்.

பணித்தளம் : **திருக்கோளூர் – செம்பூர்** – சகோதரி. எஸ்தர் சாவுக்கு எதுவான

மருந்தை குடித்துவிட்டார். தேவன் கிருபையாய் உயிர்பிழைக்கச் செய்தார். சுகம் கொடுத்த தேவனைத் துதிப்போம்.

**திருக்கோளூர்** – சகோ. பாலா குடிப்பழக்கத்தில் அடிமையாயிருந்தார், ஜெபத்தோடு தேவன் ஜெபத்தைக் கேட்டு குடியிலிருந்து விடுதலை கொடுத்து, குடும்பத்தில் சமாதானம் கொடுத்தார்.

**ஸ்ரீமூலக்கரை** – 28.9.14 அன்று நடந்த சிறுவர் முகாமையும், 21ந்தேதி நடந்த இயேசுவோடு இனிய வாலிபர் மாலை கூடுகையும் தேவன் ஆசீர்வாதமாய் நடத்தித் தந்தார்.

**கீழத்தட்டப்பாறை :** 10,11,12 ஆகிய தேதிகளில் நடந்த கன்வென்ஷன் கூட்டத்தை எந்தவிதமான தடையும் இல்லாமல் தேவன் நடத்தித் தந்தார். அநேகர் கலந்து கொள்ள தேவன் கிருபை செய்தார்.

**மேலத்தட்டப்பாறையில்** பல ஆண்டுகளுக்கு பிறகு மீண்டுமாக ஞாயிறு ஆராதனை ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார்.

**கீழத்தட்டப்பாறை :** லட்சுமி அம்மா மகளுக்கு 15 வருடங்களுக்கு மேலாக குழந்தையில்லாமல் இருந்தது. இந்த ஆண்டு அவர்கள் கர்ப்பம் தரிக்க கிருபை செய்தார்.

பணித்தளம் : **வெத்தியார்வெட்டு** – விக்கிரக கோவிலில் தீ மிதித்ததினால் கால் வெந்து பாதம் அழுகிப்போன நிலையில் சகோதரி. இந்துராணி நம் சபைக்கு வந்தார்கள். நாம் ஜெபித்தோம். ஒரே வாரத்தில் இவர் கால் குணமாகி வேலைக்குச் செல்ல கர்த்தர் கிருபை செய்தார்.

**பொங்கலூர் :** சகோதரி. செட்டியம்மாவின் மகன் திருமணம் நல்லமுறையில் நடக்க கர்த்தர் கிருபை செய்தார்.

## *பணித்தளங்களுக்காய் முழங்காலில்*

### விருதுநகர் மாவட்டம்

**ஏழாயிரம்பண்ணை** – முத்துக்குமார் +2 படிக்கிற மாணவன் இரட்சிக்கப்பட... வேதம் வாசித்து ஜெபிக்கிற மாணவனாய் மாற ஜெபிப்போம். ஏழாயிரம்பண்ணை தேவனுடைய கூடாரத்தில் நடைபெறுகிற ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்து தரும்படியாக ஜெபிப்போம். டேவிட் என்ற சகோதரனுக்கு இழுப்பு வியாதியிலிருந்து சுகம் உண்டாக... சகோ. ஸ்டீபன் இரட்சிக்கப்பட விடுதலை பெற ஜெபிப்போம்.

**முத்தாண்டியாபுரம்** – நவம்பர் மாதம் நடைபெற இருக்கிற சிறுவர் முகாமில் அதிகமான சிறுவர்கள் கலந்து கொள்ள, தேவைகள் சந்திக்கப்பட, புதிய குடும்பங்கள் ஆராதனைக்கு கடந்து வர ஜெபிப்போம்.

**தூக்காரெட்டிப்பட்டி :** சகோதர். சுப்புலெட்சுமியின் குடும்பத்தில் உள்ள பிரச்சனைகள் நீங்கி தேவன் சமாதானம் அருள ஜெபிப்போம்.

**புல்லக்கவுண்டன்பட்டி :** சகோதரி. முனிஸ்வரி, கனிப்பிரியா, அருள்ராஜ் இவர்கள் ஆலயத்திற்கு வரவும், வருகிற 9ம் தேதி நடைபெறுகிற சிறுவர் முகாமிற்கு அநேக சிறுவர்கள் கலந்து கொண்டு இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**வல்லம்பட்டி, கரிசல்பட்டி, சிவசங்குபட்டி, ஜெகவீரன்பட்டி, அன்பின் நகரம், புல்லக்கவுண்டன்பட்டி** ஆகிய கிராமங்களில் நடக்கிற ஊழியங்கள் மூலம் அநேகர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

**பண்டுதன்பட்டி :** சகோதரி. மாலையம்மாள் ஆராதனைக்கு வர காணப்படுகிற



தடைகள் மாற, பரிபூரண சுகம் உண்டாக, சகோதரி. பாலம்மாள் அவர்களின் கணவர் தொடர்ந்து ஆலயத்திற்கு வர, சகோதரி. சரண்யா ஞானஸ்நானம் எடுக்கக் காணப்படுகிற தடைகள் மாற ஜெபிப்போம்.

**மாலையூரணிப்பட்டி :** சகோ. கனகராஜ் திருமணத்தடைகள் மாற, கர்த்தருக்குள் நிலைத்திருக்க... சங்கர், தங்கராஜ் குடும்பமாக ஆலயத்திற்கு வர தேவன் உதவி செய்ய, தெய்வானையின் கணவர் இரட்சிக்கப்பட... தேவன் சமாதானத்தைத் தர... தெற்குகுளம் பட்டியைச் சேர்ந்த சகோ. ரவிக்கு நல்ல வேலை கிடைக்க, கர்த்தரைக் கண்டுகொள்ள, சகோதரி. அருணா ஞானஸ்நானம் எடுக்க காணப்படுகிற தடைகள் நீங்க ஜெபிப்போம்.

**ஜமீன்சல்வார்பட்டி :** சகோ. மாரியப்பன் நன்றாக நடக்கவும், சகோ. பாக்கியராஜ் எழுந்து நடக்க தேவன் அற்புதம் செய்ய, சகோதரி. ஞானமணி இழுப்பு வியாதி நீங்கவும் ஜெபிப்போம். செல்லையா நாயக்கன்பட்டி : சகோதரி. விமலாவிற்கு ஏற்ற துணையைத் தேவன் தரவும், சகோ. மாரியப்பன் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**பூச்சக்காப்பட்டி :** சகோதரி. மீனாவுக்கு கர்ப்பத்தின் கனி தேவன் கொடுக்கவும், இவர் கணவருக்கு நல்ல வேலை கிடைக்க, இவர்கள் குடும்பமாய் இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ள, சகோ. சரவணக்குமாருக்கு ஏற்ற துணை கிடைக்கவும் ...

பணித்தளம் : **என். திருவேங்டபுரம் – ரெட்டியப்பட்டி –** மோசே ஐயா குடும்பத்தில் பிரச்சனையினால் பிரிந்திருக்கிறார்கள். தேவன் இந்த குடும்பத்தில் சமாதானம் கொடுக்க.

**இராஜபாளையம்** – ஈசாக் ஐயா குடும்பத்தில் பிரச்சனையினால் இவர்கள் பிரிந்திருக்கிறார்கள். (மகன், மருமகள்) இவர்களும் பிரிந்திருக்கிறார்கள். இவர்கள் குடும்பத்தில் உள்ள பிரிவினை ஆவியிலிருந்து விடுதலை பெறவும், இவர்கள் எல்லாரும் சமதானமாய் கூடிய வாழவும் ஜெபிப்போம்.

**அய்யனேரி : சங்கரபாண்டியாபுரம்** – சகோ. கணேசன் வலிப்பு வியாதியில் இருந்து தேவன் விடுதலை கொடுக்க, பிள்ளையார்நத்தம் – சகோதரி. கௌசல்யா திருமணம் ஆகி 8 ஆண்டுகள் ஆகியும் குழந்தை இல்லை, தேவன் குழந்தை பாக்கியம் அருள, தேவர்குளம் – சகோதரி. சந்திரா திருமணம் ஆகி 8 ஆண்டு ஆலயத்திற்கு வருவதினால் இவரது கணவரிடமிருந்து எந்த உதவியும் கிடைப்பது இல்லை. தேவன் இவர்களுக்கு சமாதானம் அருள ஜெபிப்போம்.

### நெல்லை மாவட்டம்

**அத்தியூத்து** – சகோ. குருசாமி சிறுநீரக கல் அடைப்பு குணமாக, சகோதரி. சுபாவுக்கு ஆசிரியர் பணி கிடைக்க, சகோதரி. சின்ன பிள்ளை, சகோ. ஜேம்ஸ் இவர்களுக்கு முட்டுவலி குணமாக, சகோ. செல்வத்திற்கு வரவேண்டிய பணங்கள் வர, சோலைச்சேரி – சகோ. விக்டர் ராஜையா கல்லடைப்பு குணமாகவும் ஆராதனைக்கு அநேகர் கடந்து வரவும்

**அழகப்பபுரம் – அழகப்பபுரம்** கிராமத்தில் அநேக ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு, ஆலய ஆராதனைக்கு வரவும், கீக்குளம் யோசுவா மனைவிக்கு கர்ப்பத்தின்கனி தேவன் கொடுக்கவும்.

**நம்பி பத்தி :** ராஜேஷ் – ரீட்டா இவர்கள் குடும்பத்தில் கடன் பிரச்சனைகள் மாறவும், தங்கராஜா என்பவருக்கு எலும்பு தேய்வு நடக்கமுடியவில்லை. பூரணசுகம் உண்டாகி ஆலயத்திற்கு நடந்து வர ஜெபிப்போம்.

**திருவேங்கடம் :** கட்டப்பட்டு வருகிற ஆலயத்தின் தேவைகள் சந்திக்கப்பட்டு விரைவில் கட்டிமுடிக்கப்பட, ஆலய ஆராதனைக்கு புதிய ஆதுதுமாக்கள் வர, சகோதரி.

ஏஞ்சலுக்கு வேலை கிடைக்கவும், மேலான் மறைநாடு, தலைவன்பட்டி நடக்கிற ஊழியங்களுக்காக, சுப்பையா நாயக்கன்பட்டி – சகோ. சீனிவாச பெருமாள் ஆராதனையில கலந்து கொள்ள, இவரின் திருமண காரியம் தடைகள் மாற ஜெபிப்போம்.

**சின்னக்காளான்பட்டி** – சகோதரி. அன்னமேரிக்கு தேவன் கர்ப்பத்தின்கனி கொடுக்க ஜெபிப்போம்.

## தூத்துக்குடி மாவட்டம்

**தூத்துக்குடி ரூரல் :** இராஜசேகர், முருகன், கிட்டு, பிரபு இவர்கள் இரட்சிக்கப்பட... சகோதரி. லட்சுமி இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்ற இந்த மகள் இவர்களுடைய கணவர் இறந்து விட்டார். ஒரு பெண் குழந்தை உள்ளது. கர்த்தர் இவர்களை பாதுகாக்க, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம். சோபியா பிரியதர்சினியின் திருமணத் தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

**தாளமுத்துநகர் :** எதிர்பாராத விபத்தினால் இறந்த சகோதரி. ஜெயா குடும்பத்தை கர்த்தர் பாதுகாத்துக்கொள்ள, சகோதரி. ருசா மகனுக்கு கர்த்தர் குழந்தை பாக்கியம் அருள... சகோதரி. ரத்தினம் திருமண காரியத்தை கர்த்தர் வாய்க்கப் பண்ண... சகோதரி. சரஸ்வதிக்கு கர்த்தர் பூரண சுகம் கொடுக்க... பட்டுக்கு கர்த்தர் திருமணகாரியத்தை வாய்க்கப் பண்ண ஜெபிப்போம்.

**திருக்கோளூர் : பைங்குளம் –** சகோ. இராஜாதுரை அவர்களுக்க தேவன் பரிபூரண சுகம் கிடைக்க, தவசிநகர், சகோதரி. சங்கரிக்கு சுகப்பிரசவம் உண்டாக...

**இந்திராநகர் :** சகோதரி. வேணி அவர்கள் மகன் 6ம் வகுப்பு படிக்கிற இந்த மகன் பள்ளிக்கு செல்ல மனமில்லாதவனாய், அதிகமாக பொய் பேசுகிறவனாக காணப்படுகிறான். தேவன் இந்த மகனுக்கு ஞானம் கொடுக்க இவன் தொடர்ந்து படிக்க, இவன் மூலம் பெற்றோர்களுக்கு காணப்படும் மனப்பாரங்கள் நீங்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை – கீழூர்** – சகோ. மாரிமுத்து, நடுவூர் – சகோ. செந்தூரான், சகோ. சாந்தகுமார் இவர்களது கால், கை, இடுப்பு பகுதியில் உள்ள உறுப்புகள் செயல்படவும்... காலனி பகுதியில் வசிக்கும் சகோதரி. திலகவதிக்கு பிசாசின் பிடியிலிருந்து விடுதலை கிடைக்கவும், இந்தப் பணித்தளத்தில் நடக்கிற சிறுவர் ஊழியம் இயேசுவோடு இனிய மாலை கூடுகைகளுக்கு அநேக சிறுவர்கள் வாலிபர்கள் கடந்து வரவும்...

பணித்தளம் : **சுப்பிரமணியபுரம்** – சகோதரி. ஜெனிபர் குடும்பத்தை தேவன் ஆறுதல் படுத்த, சமாதானத்தால் நிரப்ப ஜெபிப்போம். சக்கம்மாள்புரம் – சகோ. சுவாமியடியாள் குடியிலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட... சகோதரி. ஜெயசீலி கால் நன்றாக நடக்க ஜெபிப்போம்.

பணித்தளம் : **புதுக்கோட்டை – குருமலை** – சகோதரி. பேச்சியம்மாள் வயிற்றில் உள்ள கேன்சர் வியாதியிலிருந்து கர்த்தர் சுகம் கொடுக்க... இங்கு நடைபெறுகிற சகோதரிகள் கூடுகையில் கலந்து கொள்கிற சகோதரிகள் வாழ்வில் கர்த்தர் அற்புதம் செய்ய ஜெபிப்போம்.

**வாகைக்குளம் :** சகோதரி. லட்சுமி குடும்ப சமாதானத்திற்காக... இங்கு குடும்ப முகாம் நடைபெற தடைகள் நீங்க... அத்திமரப்பட்டியில் வாலிபர் முகாம் நடைபெற தடைகள் நீங்க

பணித்தளம் : **கீழத்தட்டப்பாறை** – வடக்கு சிலுக்கன்பட்டியில் வீட்டுக்கூடுகை ஆரம்பிக்கப்பட, சொக்கலிங்கபுரம், செட்டியூரணி, கல்லன்பரம்பு இந்த மூன்று கிராமங்களிலும் வீட்டுக்கூடுகை, சிறுவர் கூடுகை ஆரம்பிக்கப்பட ஜெபிப்போம்.



## திருச்சி மாவட்டம்

பணித்தளம் : **தோப்புப்பட்டி** – உப்பாத்துப்பட்டி – புஸ்பம் என்ற சகோதரிக்கு மூலவியாதியிலிருந்து அற்புத சுகம் உண்டாக, சகோதரி. விக்டோரியா இவர்கள் கணவன் மனைவி கருத்து வேறுபாடு சரியாக, மேரி என்ற சகோதரிக்கு கடன் பிரச்சனையிலிருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.

**தோப்புப்பட்டி** – ஈசாக்கு என்ற சகோதரன் இரட்சிக்கப்பட, பென்னா என்ற சகோதரனுக்கு நல்ல திருமண வாழ்க்கை அமைய ஜெபிப்போம்.

## மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி** – சகோதரி. பேச்சியம்மாள் கணவர் இரட்சிக்கப்பட, மகனுக்கு நல்ல வேலை கிடைக்க, குடும்பமாய் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வர, சகோ. தாமஸ் என்பவரின் திருமணத்திற்கு பணத்தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.

கார்த்திகா செல்வி குடும்பமாக ஆராதனைக்கு வர கால் வலியிலிருந்து உப்பு வியாதி நிரந்தர விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.

**அரியலூர் மாவட்டம் :** வெத்தியார்வெட்டு (மிஸ்பா) சகோதரி. கவிதா ஞானஸ்நானம் பெற்று சபைக்கு வந்து கொண்டிருந்தார். ஆனால் இவரது கணவர் இவரை சபைக்கு வர அனுமதிப்பது இல்லை. இவர் கணவரது அனுமதியுடன் சபைக்கு வர ஜெபிப்போம். திரு. தங்கராசு ஐயா அவர்களின் மூத்த மகன் பாஸ்கருக்கு தேவன் ஒரு குழந்தை தந்து அவர்களுடைய மன வேதனையை மாற்றும்படி இவர்கள் சபைக்கு நல்ல தூணாக விளங்கும்படி ஜெபிப்போம்.

## திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **பொங்கலூர் – மஞ்சப்பூர்** – செல்வி பிரியா மனவியாதியிலிருந்து விடுதலை பெற, கனகவல்லி மகன், மகளுக்கு திருமண தடைகள் நீங்க...

காட்டுப்புதூர் – ஊழியத்திற்கு தடையாய் இருக்கிற கோவில் பூசாரியை கர்த்தர் சந்திக்கும்படிக்கும், சிறுவர் ஊழியத்திற்கு தடையில்லாமல் இருக்கவும் ஜெபிக்கவும்.

## *நமது ஊழியங்களை தாங்குவோர் கவனத்திற்கு*

நீங்கள் ஜெபத்துடன் நமது மிஷனெரி ஊழியத்தை, வாலிப, மாணவ, சிறுவர் ஊழியத்தை, ஜெப ஊழியத்தை தாங்க காணிக்கைகள் அனுப்பும் போது வங்கி கணக்குகள் மூலமும் அனுப்பலாம்.

| வங்கி கணக்கு பெயர் | IFS Code | வங்கி பெயர் | கணக்கு எண் |
|---|---|---|---|
| மிஷனெரி ஊழியம்<br>Grace Ministries<br>Grace Ministries | <br>SBIN0007629<br>TMBL0000156 | <br>SBI Bazaar, Tuticorin<br>TMB Ltd., Sipcot Tuticorin | <br>10237757808<br>156100710400123 |
| வாலிப மாணவர் சிறுவர் ஊழியம்<br>Young Soul Winners Mission | TMBL0000035 | TMB Ltd., Pudukottai. Tuty | 035100710400087 |
| ஜெப ஊழியம்<br>Tabernacle of God Mission | TMBL0000033 | TMB Ltd., Elairampannai. | 033100710400026 |

நீங்கள் அனுப்பும் காணிக்கைகள் யாவும் ஊழியத்தில் வரவு வைக்கப்பட்டு உங்களுக்கு இரசீது அனுப்பப்படும். நீங்கள் காணிக்கை அனுப்பியதை 94432-89026 என்ற எண்ணிற்கு SMS மூலமாகவோ அல்லது கடித மூலமாகவோ எங்களுக்கு தெரிவியுங்கள்.

## பண்டிகை கால வெகுமதி

ஒவ்வொரு ஆண்டும் பண்டிகைக்காலத்தில் நமது மிஷனெரிகளுக்கும் பிள்ளைகளுக்கும் மற்றும் பணித்தளத்திலுள்ள ஏழை மக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் நாம் உதவி செய்து வருகிறோம். அதற்காக நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் உதாரத்துவமான காணிக்கையை கொடுத்து வருகிறீர்கள். இந்த ஆண்டு நமது தேவை ரூ. 2½ லட்சம். ஒவ்வொரு ஆண்டையும் போல உங்கள் காணிக்கைகளை அனுப்பித் தாங்க உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## தசமபாகம் நியாயப்பிரமாணமா?

நல்ல கேள்வியை கேட்டிருக்கிறீர்கள். தசமபாகத்தை பற்றி நியாயப்பிரமாணம் பேசுகிறது உண்மைதான். ஆனால் மத்தேயு 23:23, லூக்கா 11:42 ம் இயேசுவும் தசமபாகத்தைக குறித்து பேசுகிறார். அவர் இவைகளையும் (நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும், நியாயத்தையும், தேவஅன்பையும்) செய்ய வேண்டும். அவைகளையும் (தசமபாகத்தையும்) விடாதிருக்க வேண்டுமே என்கிறார். இயேசு விடாதிருக்க வேண்டும் என்று சொல்லும் தசமபாகத்தை நாம் விடாதிருக்க வேண்டுமே. பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் தசமபாகம் கொடுத்தது நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பதாக (ஆதி. 14:20). யாக்கோபு தசமபாகம் செலுத்துவேன் என்று பொருத்தணை பண்ணினதும் (ஆதி. 28:22) நியாயப்பிரமாணத்திற்கு முன்பதாக. எனவே தசமபாகம் நியாயப்பிரமாணத்தின் படியானது என்று வாதிடுவது சரியானது அன்று. ஆபிரகாம் நீதிமானாக்கப்பட்டது எப்படி விருத்தசேதனத்திற்கும், நியாயப்பிரமாணத்திற்கும் முந்தினதோ (ஆதி. 15:6, கலா. 3:6-9) அப்படியே தசமபாகமும் நியாயப்பிரமாணத்திற்கும் விருத்தசேதனத்திற்கும் முந்தினது. ஆபிரகாம் மெல்கிசேதேக்கு தசமபாகம் கொடுத்த சம்பவம் இவ்விரண்டிற்கும் முந்தினது என்பதை ஆதி. 14 அதிகாரத்தின் மூலம் அறிகிறோம். ஆகவே கிறிஸ்தவர்கள் தசமபாகம் செலுத்துவது நியாயப்பிரமாணத்திற்குட்பட்டுதென்று எண்ணத் தேவையில்லை. கிறிஸ்தவ விசுவாசிகளாகிய நாம் கர்த்தருக்கு தசமபாகம் செலுத்த கடமைப் பட்டிருக்கிறோம். வாசியுங்கள் மல். 3:10.

கேள்வி பதில் தொடரும்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

**தேவனுடைய கூடாரத்தில்**

**20வது வருட நிறைவு திறப்பின் வாயில் ஜெபமும் ஸ்தோத்திர கூடுகையும்**

**2014 நவம்பர் 26, கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்!

இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194



# FRIENDSHIP

**Dr. P. Selvaraj,** **Pollachi**

Eight examples of friendship are mentioned in the Key word concordance of THE PEOPLE STUDY BIBLE - The Living Bible. The list starts with Ru.1:16

"Don't make me (Ruth) leave you (Naomi), for I want to go wherever you go, and to live wherever you live; your people (Israelites) shall be my people (not our Mobites) and your God (God of Israel) shall be my God. What a friendship between a widowed - daughter - law and a windowed mother-in-law!

"After king saul had finished his conversation with David met Jonathan, the king son, and there was an immediate bond of love (friendship) between them. Jonathan swore to be his (David's) blood brother" In KJV we read that the soul as his own soul? Are there many soul - mates in the present world? Can there be a friendship that is better than a soul-to-soul friendship. Media talk about mind-to-mind and even body-to-body friendship, the latter resulting in a socio pathalogical , pathetic, pervert condition The lesbian relationships that are anti-nature and anti-God.

In 2Sam 10:2 we come across David saying : "I am going to show special respect for him ... because his father Nahash was always so loyal and kind to me". Loyalty and kindness germinate friendship.

Friendship is built on mutual loyalty. There shouldn't be a need for a question like this recorded in 2King 10:15.

"Are you as (Jehonadas) as loyal to me (Jehu) as I am to you?"

We read in Job 2:11 : "When three of Job's friends (Elipahz, Bildad and Zophar) heard of all the tragedy that had befallen him (Job), they get in touch with each other and traveled from their homes to comfort and console him..." Doesn't Sage Thiruvalluvar defines friendship as 'Idukkan Kalaivathu' (Trandslitereted Tamil phrase) meaning taking away ones (a friend's) sorrow.

Jesus and Lazarus were 'good friends' (Jn 11:3), 'close friends' (Jn. 11:36) The Jewish Leaders said : " See how much he (Jesus) loved him (Lazarus)". ...Jesus was moved with deep anguish (because Lazarus was dead). Just think about the depth of friendship between Jesus and Lazarus.

Paul said : "Tell Priscilla and Aquila 'hello' Rom. 16:3) compare this 'hello' with the formally, habitually, or formality-intended 'hello' in places and web chat tooms. "Greet my good friend Epaenatus" also said Paul (Rom. 16:5 as ninth example). Romans chapter 16 itself is full of hellos, greetings, good wishes and commendations.

The list concludes with Phil. 2:22:

"... He (Timothy) has been just like a son to me in helping me (Paul) preach the Good News. Age-gap is no bar for developing friendship. similarly, gender - too is not a barrier to friendship. That can be discussed in a separate write - up. (because of confletine views, caused by cultural ethos, of course!).

A FRIEND IN NEED IS A FRIEND INDEED. Yes, indeed!YES in the true sense of what the WORD OF TRUTH says about Friendship. Amen! Alleluiah!!